முருகப்பெருமான் துணை

**மகான் செருத்துணை நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.03.2023**, சனிக்கிழமை

1. தேசமெல்லாம் ஞானவான்கள்
   திறம்பட சேவை நோக்கில் படைக்க
   நேசக்கரம் கொண்டு அருளும்
   ஞானியே அரங்கனுன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
   குறைவிலா இருபான்திகதி காரிவாரம்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 20 ம் நாள் 04.03.2023, சனிக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   தேசிகனுக்கு செருத்துணை நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான ஞான உலகம் படைக்க
   ஞானவழி காட்டும் அரங்கன்
   ஞானமே உலகை மாற்றும்
4. மாற்றும் மகா சக்தியாக
   மரணத்தை வெல்லும் வண்ணம்
   ஆற்றல்பட சித்தி அருளுகின்ற
   ஆக்கமாக அரங்கமகான் தானும்
5. தானும் அற்புதம் நிகழ்த்திவர
   தவமான அரங்கன் வழிகளை
   ஞானமாக ஏற்று இனிதே
   நம்பிக்கை வைத்து மக்கள் வர
6. வருகவே நிலைமைகள் யாவும்
   வந்தடையும் ஞானபலமாக
   முருகப்பெருமான் வழிபாடாக
   மொழிகுவேன் எங்கும் பரவி
7. பரவி உலகமாற்றம் தானும்
   பாடிடுவேன் ஞானவான்நிறைந்த
   தரணியில் ஞானப்படைகள்
   தவசியின் படைகளாகப் பெருகி
8. பெருகியே உலகம் தன்னில்
   பேராசான் அவதாரம் வழி
   தருமம் பெருகி தயவும் பெருகி
   தரணியோர் பாதுகாப்பு நிறைந்த
9. நிறைந்த புவியாக மாறி
   நிலவுலகில் இயற்கை பலமும்
   குறைவிலா தொழில் வளமும்
   குருபரன் இறங்கி காக்கும்

10. காக்கும் லோகமாக மாறி
கலியின் இடர்களெல்லாம் விலகி
தாக்கும் எதிர் வினைகளெல்லாம்
தரணியை விட்டு அகன்றோடி

11. ஓடியே ஞானவான் தலைமை
ஓங்காரம் பட அமையும்
நாடியே வேலவனும் ஆளவே
ஞான உலகம் ஞானயுகமும் ஆகும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–